T/300/0100 0100

# அடிமைச் சாசனம்

பண்டிதர் கா.பொ. இரத்தினம் பா.உ.

வேலணை முதலாம் வட்டாரத்
தமிழரசுக் கட்சிக் கிளையின் வெளியீடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

T/300/0400.
P. சேர்
300

# அரசியல் அமைப்பு தமிழரின் அடிமைச் சாசனம்

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்த புகைவண்டியில் நடந்த நிகழ்ச்சி: கோப்பாய் பா. உ. திரு. சி. கதிரவேற்பிள்ளையும் நானும் அந்த வண்டியில் பயணம் செய்தோம். எங்களுடன் ஒரு பொறியியலாளரும் பயணஞ் செய்தார். அந்தப் பொறியியலாளர் எங்களைக் கேட்ட ஒரு கேள்வியே இந்நூலை வெளியிடத்தூண்டியது.

"புதிய அரசியலமைப்பைப் படித்துப் பார்த்தேன். அதில் தமிழ் மொழிச் சட்டமும் தமிழ் மொழிப் பிரமாணங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றைக் குறிப்பிட்டதால் தமிழுக்கு உரிமை கிடைக்கிறது அல்லவா? நீங்கள் ஏன் இல்லை என்கிறீர்கள்?" என்று அந்தப் பொறியியலாளர் கேட்டார். அவருக்கு உண்மையான நிலைமையை நாங்கள் விளக்கினோம். இந்த அரசியல் அமைப்புத் தமிழரின் அடிமைச் சாசனம் என்பதை அவர் சிறிதும் தயங்காமல் ஏற்றுக் கொண்டார்; ஆட்சி செய்வோரின் ஏமாற்று வித்தையையும் உணர்ந்து கொண்டார்.

## வாலறுந்த நரிகள்

எல்லா விடயங்களையும் அறிந்து சீர்தூக்கிப்பார்க்க வாய்ப்பில்லாத பலர் இவரைப்போல எண்ணி ஏமாற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடையாமல் உண்மையை அறிந்து கொள்வதற்காகவே இதனையெழுதி வெளியிடுகின்றோம். அரசாங்கத்தைக் கட்டியணைக்கும் பைத்தியகாரர் சிலர் சுயநலத்தாலும் அறியாமையாலும் உந்தப்பட்டுப் பிழையான கருத்துக்களைப் பத்திரிகைகள் வாயிலாகப்பரப்ப அல்லும் பகலும் அயராமல் முயல்கின்றனர். நாங்கள் கூறுபவற்றை வெளியிடுதற்கு அஞ்சும் பத்திரிகைகள் வாலறுந்த நரியைப்போல நடிக்கும் இவர்களின் கருத்துக்களை வெளியிட்டு அரசாங்கத்திடம் நல்ல பெயர் பெறுவதற்குப் போட்டி போடுகின்றன. எனவே, மக்கள் உண்மையை உணருவதற்காக இந்நூலை வெளியிடல் இன்றியமையாததாகின்றது.

## உயிர்போன பிணம்

குழந்தை பிறக்கும் பொழுதே முடமாக நோயுற்று நலிந்து பிறந்தது. உயிரடங்கிக்கிடந்தது; இந்தக் குழந்தை நோய் நீங்கி எழுந்து நடமாடித் திரியாது என்று பலர் கூறினார்கள்; சிலர் தப்பிப்பிழைக்கலாம் என்றார்கள். அதன் நோயைத் தீர்த்து இயங்கச் செய்தற்குரிய மருந்தைக் கொடுப்பதில்லை என்று முடிவு செய்தால் அந்தக் குழந்தை உயிர்த்து எழுந்து நடமாடுமா? உயிர் போன பிணமாகத்தானே காட்சிதரும்!

இந்த உயிர்போன பிணம்தான் 1958இல் நிறைவேற்றப்பட்ட 28ஆம் இலக்கத் தமிழ்மொழி (விசேட ஏற்பாடுகள்) சட்டம்.

''இந்த வலுவற்ற சட்டத்தால் பயன் விளையாது; தமிழ் உரிமை கிடையாது'' என்று கூறித் தமிழ் அரசுக் கட்சி அன்றும் போராடினது; இன்றும் போராடுகிறது. இந்தச் சட்டத்தை நிறைவேற்றிய பிரதம அமைச்சர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா சிங்களம் மட்டும் சட்டத்துக்குத் தேவையான திருத்தங்களை ஆராய்தற்குத் தாம் ஆயத்தம் எனவும் பாராளுமன்றத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில் 14–6–1956இல் கூறினர். ஆனல் இப்பொழுது புதிய அரசியலமைப்பில் சிங்களம் மட்டும் சட்டம் புகுத்தப்பட்டுள்ளது. மூன்றில் இரண்டுக்கு மேற்பட்ட தொகையினரான பாராளுமன்ற உறுப்பினர்கள் வாக்களித்தால் மட்டுமே - அஃதாவது 157 பாராளுமன்ற உறுப்பினர்களில் 105 பேருக்கு மேற்பட்டோர் வாக்களித்தால் மட்டுமே – இனி இந்தச் சிங்களம் மட்டுஞ் சட்டத்தைத் திருத்த முடியும்.

அரசியலமைப்பில் சேர்க்கப்படமுன் இச்சட்டம் ஒரு சாதாரண சட்டம். ஆளும் கட்சியினர் எதிர்க்கட்சியினரிலும் ஒரு வாக்குக் கூடப்பெற்றுலும் இந்தச் சட்டத்தை மாற்றலாம். இந்த இலகுவான நிலைமை இன்று மாற்றப்பட்டு இலகுவில் மாற்றமுடியாமல் இச் சட்டம் பாதுகாக்கப்பட்டுள்ளது. இதை இயக்குதற்குப் பிரமாணங்கள் தேவையில்லை.

## தமிழ்மொழிப் பிரமாணங்கள்.

உயிரடங்கின உடலாயிருக்கும் தமிழ்மொழிச் சட்டமோ பிரமாணங்கள் இல்லாமல் இயங்க முடியாத சட்டம். இச்சட்டத்தை 1958இல் நிறைவேற்றியபின் இரண்டு ஆண்டுகள் கழித்து இதனை நடைமுறைப்படுத்துதற்கு திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்காவின் அரசாங்கம் சில பிரமாணங்களை 14–12–1960இல் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தது. திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவும் சிங்களப் பாராளுமன்ற உறுப்பினர் சிலருஞ் செய்த சூழ்ச்சியால் இப்பிரமாணங்கள் நிறைவேற்றப்படாமல் மீட்கப்பட்டன.

இதனல் 1966ஆம் ஆண்டுவரையும் எட்டாண்டுகளாக இந்தத் தமிழ்மொழிச் சட்டம் உயிரடங்கிய பிணமாகவே கிடந்தது. 1965 இல் ஐக்கிய தேசியக் கட்சி தமிழ் அரசுக் கட்சியுடன் செய்து கொண்ட உடன்படிக்கைப்படி 1966 சனவரி 8ஆம் திகதி இச்சட்டத்தின் கீழ் தமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிப்பிரமாணங்களை நிறைவேற்றியது. இந்தப் பிரமாணங்களை நிறைவேற்றுமல் தடுப்பதற்கு இப்பொழுது ஆளுங்கட்சியிலுள்ள முக்கூட்டுக் கட்சிகளும் பெருங் கிளர்ச்சி செய்தன; இந்தக் கிளர்ச்சியில் ஒரு புத்தபிக்குவும் பொலிசாரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

முக்கூட்டுக் கட்சிகள் ஆட்சிக்கு வந்தவுடன் இரத்தினசாரதேரோ எனும் பெயருடைய இந்தப் பிக்குவுக்கு அவர் இறந்த இடத்தில் நினைவுத்தூண் நிறுவி விழா எடுத்தன. இந்த நினைவு விழா தமிழ் மொழிக்குக்கொடுக்கப்பட்ட அரைகுறை உரிமையையும் முழு மூச்சுடன் எதிர்க்கும் விழாவாக அமைந்தது. ஆட்சிக்கு வந்த பின்னர் கூடத் தமிழ் மொழிக்கு எவ்வித உரிமையையும் கொடுக்கும் எண்ணம் இவர்களிடம் இல்லை என்பதை நாடறியச் செய்து, இவர்களுடைய முகமூடியைக் கிழித்தெறிய எண்ணிய திரு. டட்லி சேனநாயக்கா, தமது அரசாங்கம் 1966இல் நிறைவேற்றிய தமிழ் மொழிப் பிரமாணங்களை, திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் முக்கூட்டு அரசாங்கம் நடைமுறைப்படுத்துமா என்று ஒரு கேள்வியை அரசாங்கத்திடம் கேட்டார்.

## மூன்றும் இரண்டும்

இந்தக் கேள்விக்குப் பாராளுமன்றத்தில் 6–3–71 இல் அரசாங்கச் சார்பில் விடைகூறிய அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா, ''நடைமுறைப்படுத்த மாட்டோம்'' என்று கூறினர். மூன்று நிமிடத்தில், இந்தத் தமிழ்ப் பிரமாணங்களை நடைமுறைப்படுத்த மாட்டோம் என்று மூன்று முறையும், [1] இதுதான் தங்கள் அரசாங்கத்தின் கொள்கை என்று இரண்டுமுறையும் அவர் அழுத்தம் திருத்தமாக கூறினர். [2] 6–3–71 இல் திரு. டட்லி சேன

1. அஞ்சாட்டு (பாராளுமன்ற அறிக்கை) 93-15 நி 1771.
2. We are implementing our policy namely not to implement the regulations

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயக்கா கேட்ட கேள்வியின் பின் நான் அமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவிடம் பின்வரும் கேள்வியைக் கேட்டேன்.

''இந்த அரசாங்கத்தின் அரியணை உரையில் தமிழ் மொழிச் சட்டம் நீதியாகவும் நிறைவாகவும் நடைமுறைப் படுத்தப்படுமென இந்த அரசாங்கம் கூறியுள்ளதெனினும் இன்றுவரை அரசாங்கம் தமிழ்மொழி (விசேட ஏற்பாடுகள்) பிரமாணங்களை நடைமுறைப்படுத்தவில்லை என்பதையும், நடைமுறைப்படுத்துதற்கு அரசகரும மொழித் திணைக்களமோ, பொறுப்பான அமைச்சரோ, அமைச்சரவையோ எவ்வித பணிப்புக்களையும் பிறப்பிக்கவில்லை என்பதையும், இதனால் தமிழ் மக்களுக்கு நாள்தோறும் தனிச் சிங்களக் கடிதங்களும் அறிக்கைகளும் பிறவும் அனுப்பப்படுகின்றன என்பதையும் அவர் ஏற்றுக்கொண்டு, இனிமேலாகுதல் தமிழ்மொழி உரிமையை முழுமையாகக் கொடுத்தற்கு உடனே நடவடிக்கை எடுப்பாரா?'' —எனது இந்தக் கேள்விக்கு அவர் நேர் மறுமொழி கொடுக்காமல் ''தமிழ் மொழிப் பிரமாணங்களை நடைமுறைப்படுத்த மாட்டோம்'' என்று மீண்டுங்கூறி மழுப்பித் தப்பிக் கொண்டார். [3]

## தமிழ்ப் புறக்கணிப்புக் கண்காட்சி

இன்றுவரை தமிழ்மொழிக்கு இந்த அரசாங்கம் எவ்வித உரிமையைக் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கவில்லை. இதை இடித்து இடித்துச் சுட்டிக் காட்டினோம். எதுவும் உருப்படியாகச் செய்யப்படவில்லை. தமிழ் உரிமைகளைப் பறிப்பதிலும், புறக்கணிப்பதிலும், சிங்களச் சொற்களைத் தமிழில் புகுத்துவதிலுமே தொடர்ந்து அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. இந்த அரசாங்கத்தின் தமிழ்மொழிப் புறக்கணிப்பை எல்லோரும் கண்ணுரக் காணத்தக்கதாக 1971

3. அஞ்சாட்டு 93/-15 கி 1774 "Not to implement the regulations is a part of our policy".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாசியில் தமிழ்ப் புறக்கணிப்புக் கண்காட்சி ஒன்றினை நடாத்தினேம். அரசாங்கத்தின் அமைச்சர் இருவரை இக்காட்சியை வந்து பாருங்கள் என்று அழைத்தோம். ''பார்த்தால் தமிழ்ப்பகுதிக்கு வருகை தரும்பொழுது தமிழ் உரிமைகளைக் கொடுக்கிறேம் என்று கூறி ஏமாற்றுவதை நீங்களும் உங்கள் தோழர்களும் நிறுத்துவீர்கள்'' என்றும் கூறினேம்.

இன்று தமிழ் மொழிக்கு என்ன உரிமை கொடுக்கப் பட்டுள்ளது? தமிழ்ப் பகுதிகளில் தமிழர் எந்த மொழியில் ஆளப்படுகின்றனர்? தமிழ் தெரியாத அரசாங்க உத்தியோகத்தர்கள் ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் ஆட்சி நடத்துகின்றனர். கச்சேரிகள், காரியாதிகாரி அலுவலகங்கள், கல்வி அலுவலகங்களிலிருந்து சிங்களத்திலும் (ஆங்கிலத்திலுமே) கடிதங்கள் அனுப்பப்படுகின்றன. யாழ்ப்பாணக் கச்சேரி தனிச் சிங்களத்திலே பற்றுச்சீட்டுக்களைக் கொடுக்கிறது. தமிழ் தெரியாத பொலிசார் சிங்களத்தில் எழுதும் வாக்கு மூலங்களைத் தமிழர் ஏற்றுக் கையொப்பமிடுகிறுர்கள். ''சிங்களம் தெரியாது; தமிழில் எழுதுங்கள்'' என்றுகேட்டால் பொலிசு நிலையங்களில் அடியும் உதையுந்தான் கிடைக்கும்.

**தனிச் சிங்களம்.**

இ. போ. ச., கல்வி அமைச்சு, சுகாதாரத் திணைக்களம் முதலிய பலவற்றிலுள்ள பதவிகளுக்குத் தமிழில் விண்ணப்பம் அனுப்பும் சிங்களம் தெரியாத தமிழ் இளைஞர்களுக்கு விடுக்கப்படும் அழைப்பு முதலியன தனிச் சிங்களத்தில் மட்டுமேஉள. நெடுந்தீவு முதலிய இடங்களிலிருக்கும் இளைஞர்கள் இவற்றிலுள்ளவற்றை அறிதற்கு யாழ்ப்பாணம் முதலிய இடங்களிலுள்ள சிங்கள மக்களைத் தேடிப் பிடிக்கவேண்டியுள்ளது.

குடிவரவு குடியகல்வுத்திணைக்களத்தில் அவசரகாலச் சான்றிதழ் பெறுவதற்குத் தமிழில் நிரப்பிக் கொடுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிவங்களை அங்குள்ள உத்தியோகத்தர் ஏற்க மறுக்கின்றனர்; ஆங்கிலத்திலும் நிரப்பவேண்டுமென்று கட்டளையிடுகின்றனர். தமிழில் நிரப்பி அனுப்பும் படிவங்கள் எங்கும் பொதுவாக நிராகரிக்கப்படுகின்றன.

குடியரசானபின் அரசாங்க அலுவலகங்களிலிருந்து எனக்கு அனுப்பப்பட்ட கடிதங்களில் பல தனிச் சிங்களத்திலுள்ளன. தமிழில் எழுதுவோருக்குச் சிங்களத்திலும் (ஆங்கிலத்திலும்) மட்டுமே மறுமொழி அனுப்பப்படுகின்றது. பல படிவங்கள் இன்னும் தமிழில் வெளியிடப்படவில்லை.

**போராட்டப் பயன்**

இப்பொழுது சில படிவங்களிலும் வெளியீடுகளிலும் பெயர்ப் பலகைகளிலும் தமிழும் இடம் பெற்றுள்ளதெனில் பாராளுமன்றத்தில் நாங்கள் கேட்ட பல கேள்விகளினாலும் அமைச்சர்களுக்கு எழுதிய கடிதங்களினாலுமே இவற்றில் தமிழ் இடம்பெற்றுள்ளது.[1] கடுகதிச் சுட்டுத் துண்டில் தமிழை இடம்பெறச் செய்தற்குப் பாராளுமன்றத்தில் மூன்றுமுறை கேள்வி கேட்டேன். பதிவுச் சுட்டுத்துண்டிலும் பல திகதி முத்திரைகளிலும் தமிழ் இன்னும் இடம் பெறவில்லை. நான்காவது முறை கேள்வி கேட்பதற்கு முன் இதுபற்றி இன்றுவரை அஞ்சல் தொலைத் தொடர்பு அமைச்சருக்கு மூன்று நினைவூட்டுக் கடிதங்களை அனுப்பியுள்ளேன்.

1956 ஆம் ஆண்டு தொடங்கித் தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கடித உறைகளில் பொறித்து வந்த தமிழ் அடையாள முத்திரைகளைப் பயன்படுத்துவதை அஞ்சல் தொலைத் தொடர்பு அமைச்சு ஆறு

---

1. பாராளுமன்றத்தில் நூற்றுக்கு மேற்பட்ட கேள்விகளைக் கேட்டுள்ளேன். அமைச்சர்களுக்கும் அதிகாரிகளுக்கும் இருநூற்றுக்கு மேற்பட்ட கடிதங்களை எழுதியுள்ளேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதங்களாகத் தடுத்து வந்தது. ஆறு மாதங்கள் தொடர்ந்து பாராளுமன்றத்திலும் வெளியிலும் போராடியபின் அமைச்சரவை தமிழ் அடையாள முத்திரையைப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பயன்படுத்துதற்கு அஞ்சல் பிரமாணங்களைத் திருத்தி அதிகாரம் வழங்குவதென முடிவு செய்தது. நான்கு மாதங்களாகியும் இந்தத் திருத்தம் கூட இன்னும் செய்யப்படவில்லை; தொடர்ந்து நினைவூட்டிக்கொண்டிருக்கிறேன்.

## குடியரசு முத்திரை கூறும் குறி

அரசியல் அமைப்பில் தமிழ் உரிமைகளும் சிறுபான்மையினரின் அடிப்படை உரிமைகளும் புறக்கணிக்கப்பட்டன; பெரும்பான்மையினத்தவரான சிங்களவரின் மொழி சமயம் முதலியவற்றுக்குத் தனிப்பாதுகாப்புக்கள் பொறிக்கப்பட்டுள்ளன என்று நாங்கள் கூறுவதையும், இனிக்குடியரசில் தமிழுக்கு எவ்வித உரிமைகிடைக்கப் போகிறதென்பதையும் குடியரசு நினைவு முத்திரையில் தமிழுக்குக் கொடுக்கப்பட்டுள்ள மதிப்பு நன்கு காட்டும். ''தமிழர்'' என்று சிங்கள மக்கள் போற்றும் அமைச்சர் ஒருவரின் பொறுப்பிலுள்ள திணைக்களம் வெளியிட்ட 15 சத முத்திரையில் ''குடியரசு'' என்று தமிழில் சாட்டுக்காகப் போடப்பட்டிருக்கும் சொல்லின் தெளிவையும் சிங்களச் சொல்லின் அளவையும் குறித்து ''வெள்ளி'' ஏடு எழுதியிருப்பதை அப்படியே கீழே தருகின்றோம்.

''இலங்கை குடியரசானதைக் குறிக்குமுகமாக 15 சத முத்திரை ஒன்றை அரசு வெளியிட்டிருக்கிறது. ஒரு மலையின் பின்னணியில் உதய சூரியனைக் காட்டி, அதன் முன்னால் ஒரு தடாகத்தில் தாமரைப்பூவையும் காட்டியிருக்கிறார்கள். 'ஜனறஜய' என்ற சிங்கள எழுத்துக்கள் தாமரைப்பூவின் கீழ் புளிச்சிடுகின்றன. அதன் கீழே இன்னும் ஏதோ எழுத்துக்கள் மங்கலாக சிறிய எழுத்தில் தெரிவது போல இருக்கிறது. பூதக்கண்ணாடியை வைத்துப்பார்த்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தால் 'குடியரசு' என்று இருப்பதை ஊகிக்கலாம். தமிழர்களைப் பொறுத்த மட்டில் 'குடியரசு' இவ்வளவு மங்கலாக மறைவாக இருப்பதை அரசாங்கமே அனுமதிக்கலாமா?''

## சிங்கள ஏகாதிபத்தியத்தின் கொடுமை.

சிங்களத்தை ஆட்சி மொழியாக்கித் தமிழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்குப் போர்த்துக்கீச – ஒல்லாந்த- பிரித்தானிய ஏகாதிபத்தியங்கள் செய்யாத அநீதியைப் பௌத்த சிங்கள அரசாங்கம் துணிந்து செய்கின்றது. ஐரோப்பிய ஏகாதிபத்தியங்கள் எல்லா அரசாங்க உத்தியோகத்தர்களையுந் தங்கள் மொழியைக் கற்றுப் பரீட்சைகளில் சித்தியடையுமாறு வற்புறுத்தவில்லை; சித்தியடையும்வரை சம்பள ஏற்றத்தை நிறுத்தவில்லை; சித்தியடையாதவர்களை வேலையினின்றும் நீக்கவில்லை. சிங்கள ஊழியர்களுக்கு விதியாத மொழித் தகைமையைத் தமிழ் அரசாங்க ஊழியர்களைப் பெறுமாறு வற்புறுத்தவில்லை.

இந்த ஏகாதிபத்தியங்கள் சிங்களம் மட்டும் தெரிந்தவர்களுக்கும் தமிழ்மட்டும் தெரிந்தவர்களுக்கும் பல உத்தியோகங்களைக் கொடுத்தன. ஆளுகிறவர்களாகிய தங்கள் மொழியை இந்த உத்தியோகத்தர்கள் கற்கவேண்டுமென அவை கட்டாயப்படுத்தவில்லை. ஆளும் இனத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்களை நாட்டு மொழிகளான சிங்களத்தையும் தமிழையும் படிக்குமாறு அந்த ஏகாதிபத்தியங்கள் தூண்டின. ஆங்கிலேயர் ஆட்சியின் இறுதிக் காலத்தில் ஆங்கிலத்தில் கடமையாற்றிய சிங்கள உத்தியோகத்தரும் தமிழ் உத்தியோகத்தரும் இந்நாட்டு மொழிகளான சிங்களத்திலும் தமிழிலும் தேர்ச்சிபெற்றிருந்தனர். இவர்கள் இரு மொழிகளிலும் ஓரளவு தேர்ச்சி பெறவேண்டுமென அரசாங்கத்தால் அப்பொழுது கட்டாயப்படுத்தப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆங்கிலம் படிக்காதவர்களைச் சிங்களம் படிக்குமாறு பணித்தனர்.**

சிங்களத்திலும் தமிழிலும் கடமையாற்றிய தலைமை ஆசிரியர்கள், உதவி ஆசிரியர்கள், நொத்தாரிசுமார், திருமண - இறப்பு–பிறப்புப் பதிவாளர்கள், கிராமசேவையாளர்கள், (உடையார், விதானைமார்) தட்டெழுத்தாளர்கள், மருத்துவமாதர்கள், அலுவலக சேவகர்கள், தபால் தந்திச் சேவகர்கள், காவல்காரர், சமையல்காரர், சாரதிகள், ஏவலாளர், கவனிப்பாளர், கைதேர்ந்த தொழிலாளர், வெளிக்களத் தொழிலாளர், விற்பனையாளர், பிற சிற்றூழியர்கள் முதலானோரை ஆட்சிமொழியான ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற வேண்டுமெனக் கட்டாயப்படுத்தவில்லை ஆங்கில ஏகாதிபத்தியம்.

ஆனால், இப்பொழுது சிங்கள ஏகாதிபத்தியம் என்ன செய்கின்றது? முன்னர் ஆங்கிலத் தேர்ச்சி பெறத் தேவையில்லாத தமிழ் உத்தியோகத்தர்கள் எல்லோரையும் சிங்களத்தில் தேர்ச்சி பெறுமாறு கட்டளையிடுகின்றது; ஆங்கிலத்தில் கடமையாற்றிய தமிழ் உத்தியோகத்தர்கள் எல்லோரையும் சிங்களத்தில் கடமையாற்றுமாறு பணிக்கிறது; தமிழ் உத்தியோகத்தர்கள் எல்லோரையுமே சிங்களத்தில் தேர்ச்சிபெறுமாறு வற்புறுத்துகிறது; இதைப் போலச் சிங்கள உத்தியோகத்தர் எவரையேனும் தமிழில் தேர்ச்சி பெறுமாறு கேட்கவில்லை; தமிழ்ப் பகுதிகளுக்குச் சிங்கள உத்தியோகத்தர்களை அனுப்பும்போதுகூடத் தமிழ் தெரிந்தவர்களை அனுப்ப விரும்பவில்லை.

**'வாடா போடா......'**

தமிழ் சிறிதும் தெரியாத பொலிசார் தமிழ்ப் பகுதிகளில் கடமை ஆற்றுதற்கு அனுப்பப்படுகிறார்கள். பிரதம அமைச்சரின் அமைச்சே இப்பணியைச் செய்கின்றது. இந்தப் பொலிசார் தமிழ் மக்களை ''ஏய், வாடா, போடா, பன்றி'' என்று மரியாதையின்றிக் கொச்சைத் தமிழில் அழைக்கின்றனர். இதைப் பற்றிப் பலமுறை நான் பாராளுமன்றத்தில் சுட்டிக் காட்டினேன்! எவ்வித நடவடிக்கையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுக்கப்படவில்லை. ஆளுகிறவர்கள் ஆளப்படுகிறவர்களை— அடிமைகளை எப்படியும் நடத்தலாம் தானே!

வவுனியாவில் தமது கடையில் கறுப்புக்கொடி கட்டிய தமிழர் ஒருவரைச் சிங்களப் பொலிசு ஒருவர் பிடித்து ''உனக்கு நாடு வேண்டுமா'' என்று சிங்களத்தில் கத்திக் கொண்டு அவருடைய மண்டை உடைய அடித்தார். அடிமைத் தமிழருக்கு இது போதுமா?

## சிங்கள உத்தியோகத்தர்களும் தமிழ் உத்தியோகத்தர்களும்.

ஆங்கில ஏகாதிபத்தியம் சிங்கள உத்தியோகத்தரையும் தமிழ் உத்தியோகத்தரையும் எவ்வித வேறுபாடுமின்றி நடத்தியது. சிங்கள ஏகாதிபத்தியம் எவ்வகையில் சிங்கள உத்தியோகத்தருக்குச் சாதகமாகவும் தமிழ் உத்தியோகத்தருக்குப் பாதகமாகவும் நடக்கின்றதென்பதைப் பின்வரும் அட்டவணை நன்கு விளக்கும்:

| சிங்கள உத்தியோகத்தர் | தமிழ் உத்தியோகத்தர் |
|---|---|
| 1. தாய்மொழியில் மட்டும் கடமை ஆற்றலாம். | 1. தாய்மொழியில் மட்டும் கடமையாற்ற முடியாது. |
| 2. தமிழ்மொழி கற்க வேண்டியதில்லை. | 2. சிங்கள மொழியைக் கட்டாயம் கற்றுப் பரீட்சைகள் பலவற்றில் சித்தியடைய வேண்டும். |
| 3. ஆங்கில ஆட்சிக் காலத்தில் சிங்களத்தில் கடமையாற்றியவர்கள் சிங்களத்தில் கடமை ஆற்றலாம். | 3. ஆங்கில ஆட்சிக்காலத்தில் தமிழில் கடமையாற்றியவர்களும் இப்பொழுது சிங்களத்தில் தேர்ச்சி பெற வேண்டும் |
| 4. ஆங்கிலம் கற்காமல் கடமையாற்றியவர்கள் இப்பொழுது தாய்மொழி அறிவுடன் கடமையாற்றலாம். | 4. ஆங்கிலம் கற்காமல் கடமையாற்றியவர்கள் இப்பொழுது சிங்களத்தில் தேர்ச்சி பெறல் வேண்டும். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 5. ஆங்கில ஆட்சிக் காலத்தில் பலர் ஆரம்ப தமிழ் அறிவு பெறவேண்டும். ஆனால் இப்பொழுது தேவையில்லை. | 5. ஆங்கில ஆட்சிக் காலத்தில் ஆரம்ப சிங்கள அறிவு பெறவேண்டும், ஆனால் இப்பொழுது சிங்களத்தில் நல்ல தேர்ச்சி பெறவேண்டும். |
| 6. பிற மொழி கற்காமல் பணியாற்றலாம். | 6. சிங்களம் கற்காமல் தொடர்ந்து பணியாற்ற முடியாது |
| 7. பிறமொழித் தேர்ச்சியின்றிச் சம்பள ஏற்றம் பெறலாம். | 7 சிங்கள மொழித்தேர்ச்சியின்றிச் சம்பள ஏற்றம் பெறல் முடியாது. |
| 8. பிறமொழித் தேர்ச்சிப் பரீட்சை சித்தியடையாமல் நிரந்தர உத்தியோகம் பெறலாம். | 8 சிங்களத் தேர்ச்சிப் பரீட்சைகள் பலவற்றில் சித்தியடையாமல் நிரந்தர உத்தியோகம் பெற முடியாது. |

**அரசியலமைப்பின் மையம்**

சிங்களம் மட்டும் சட்டத்தின் உள்நோக்கமே தமிழ் அரசாங்க உத்தியோகத்தர்களை மட்டுமன்றித் தமிழர் எல்லோரையும் படிப்படியாகச் சிங்களம் படிக்கச் செய்து ஒரு பௌத்த சிங்கள ஏகாதிபத்தியத்தை நிலைநாட்டுவதே. இந்தத் திட்டத்தை இன்று சிங்களக் கட்சிகள் எல்லாமே, —தமிழுக்குச் சம உரிமை பெறப் போராடின கட்சிகள் உட்பட ஏற்றுக்கொண்டன. இந்தத் திட்டத்தை மையமாக வைத்தே அரசியல் அமைப்பு வரையப்பட்டது. இதனாலேயே தமிழரின் ஒத்துழைப்பைப் பெறுதற்கு அரசாங்கம் சிறிதும் முயலவில்லை.

இத் திட்டத்தின்படி முதலில் பௌத்த மதத்தையும் பின்னர் சிங்கள மொழியையும் திணிப்பதற்குத் தமிழ்ப்பகுதிகளில் பௌத்த தமிழ்ப் பாடசாலைகளைத் தொடக்குமாறு சிங்கள ஆட்சியாளர் சிறுபான்மைத் தமிழரைத் தூண்டினர். இவ்வாறு தொடக்கப்பட்ட பாடசாலைகளைச் சட்டத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக்கு மாருகக் கல்வி அமைச்சு அங்கீகரித்தது. இப்பாடசாலைகளில் சிங்களம் ஒரு பாடமாக நுழைக்கப்பட்டது. இப்பொழுது இப்பாடசாலைகளுக்குச் சிங்கள ஆசிரியர்களைத் தலைமை ஆசிரியர்களாக அனுப்பும் சூழ்ச்சித்திட்டம் வெற்றி கண்டுள்ளது. விரைவில் இப் பௌத்த தமிழ்ப் பாடசாலைகள் எல்லாம் பௌத்த சிங்களப் பாடசாலைகளாக மாறும் காட்சியைத் தமிழர்கள் காணலாம்.

சிங்களத்தை ஒரு பாடமாகப் படிப்பதிலும் சிங்களம் மூலமாக எல்லாப் பாடங்களையும் படிப்பதால் சிங்களத்தில் திறமையான தேர்ச்சி பெறலாம். இதனுல் ஆட்சியாளரை மகிழ்வித்து உத்தியோகம் பெறுவதற்கும் நல்ல வாய்ப்பு உண்டாகுமெனத் தமிழர்கள் சிலர் எண்ணி எல்லாப் பாடங்களையும் சிங்களத்தில் படிக்குமாறு தங்கள் பிள்ளைகளைத் தூண்டுவார்கள். இதனுல் தமிழரைச் சிங்களவராக்கும் தங்கள் சூழ்ச்சித் திட்டத்தைப் படிப்படியாக நிறைவேற்றலாம் எனவும் அரசாங்கம் எண்ணுகிறது.

தமிழரைச் சிங்களம் படிக்கத் தூண்டித் தமிழை ஒழித்துச் சிங்களத்தைத் தமிழ்ப்பகுதிகளில் விரைவில் ஆட்சிமொழி ஆக்குதற்கே கல்வி அமைச்சர் தமிழ்ப் பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் சிங்களத்தைத் திணிக்க இரவு பகலாக முயல்கின்ருர். தமிழ் மக்கள் எல்லோருக்கும் சிங்களம் தெரியுமெனின் தமிழ் மொழிபெயர்ப்பைக் கொடுக்காமல் விடலாம்தானே! தமிழ் மொழிபெயர்ப்பை இப்பொழுது கொடுப்பதைக் கட்டாயப்படுத்தக்கூட அரசாங்கம் சிறிதும் விரும்பவில்லை.

## செய்யப்படல்வேண்டும் /செய்யலாம் (சாலும் மேயும்) [1]

இதனுலேயே அமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவும் அவருடைய முக்கூட்டு அரசாங்கத்தைச் சேர்ந்தவர்களும் இந்தத் தமிழ்மொழிப் பிரமாணங்களில் உள்ள ''செய்யப்படல் வேண்டும்'' (சால்)' என்பதைச் ''செய்ய

1. Shall & May

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாம்'' (மே) என மாற்றவேண்டும் என்று அன்று 1966 இல் போராடினார்கள்; இன்றும் அதனையே வற்புறுத்துகிறார்கள்.[2] ஆட்சியாளர் விரும்பினால் தமிழில் மொழிபெயர்ப்பைக் கொடுப்பார்கள். அப்படி அவர்கள் கொடுப்பதைத் தமிழர்கள் ஏற்று அவர்களின் காலைப்பிடித்துத் துதிபாடிக் கொண்டிருக்கவேண்டும். வசதியில்லாவிடில் எதனையும் தமிழில் கொடார்கள். தமிழில் கொடுங்கள் என்று வற்புறுத்தும் உரிமை தமிழருக்கு இல்லை. ''ஆளுகின்ற சிங்கள இனம் தங்கள் வசதிப்படி விரும்பினால் போடுகிற பிச்சையைத் தமிழினம் ஏற்றுக்கொள்ள வேண்டுமே ஒழிய சட்டம் பேச—மொழி உரிமையைத் தட்டிக் கேட்க—அடிமைகளான தமிழினத்துக்கு இந் நாட்டில் அதிகாரம் இல்லை. அத்தகைய அதிகாரத்தைக் கொடுக்கமாட்டோம்'' என்பதே ஆட்சியாளரின் தெளிவான உறுதியான உயிர்க்கொள்கையாகும். இந்தக் கொள்கையை இந்தப் புதிய அரசியலமைப்பு நிலைத்த நிரந்தரமான கொள்கையாக ஆக்கித் தமிழரின் அடிமைச்சாசனத்தை வரைந்துள்ளது.

## நீதிமன்றத்துக்குப் போங்கள்

இந்தத் தமிழ்ப் பிரமாணங்களின்படி ''அரசாங்கத்துக்குத் தமிழில் எழுதினால் தமிழில்மறுமொழி பெறத் தமிழ் மக்களுக்கு உரிமையுண்டு. எனவே மொழிபெயர்ப்பை ஏற்க மாட்டோம்.'' என்று நான் பாராளுமன்றத்தில் வற்புறுத்தினேன். ''இவ்வாறு உரிமையில்லையென்றும்; உரிமையிருக்கிறதென்று ஊர்காவற்றுறைப் பிரதிநிதி கருதினால் அதனை நிலைநாட்டுதற்கு நீதிமன்றம் செல்லலாம்'' என்றும் அமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா பாராளுமன்றத்திலே 30-11-71ல் எனக்கு விடை கூறினார்.

2. அஞ்சாட்டு 93/15 நிரல் 1772, 1773

சட்டங்கள் போதிய உரிமையைக் கொடுக்கவில்லை என்று கருதினுல் அவற்றைத் திருத்தவேண்டிய கடப்பாடும் அதிகாரமும் உடைய அரசாங்கம் வழக்குத்தொடர்ந்து பாருங்கள் என்று கூறுவது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதுபோன்ற கொடுமைமட்டுமன்றி எங்களுக்கு எவ்வித உரிமையையும் அரசாங்கம் தராது என்பதை உறுதிப்படுத்துவதுமாகும்.

## அடிமைகளின் பொய்ப்பிரசாரம்.

*29-12-71* ஆம் திகதியன்று வழிகாட்டு விடயக் குழுவினுல் சமர்ப்பிக்கப்பட்ட அரசியலமைப்பு வரைவில் சிங்களம் மட்டும் சட்டமும், தமிழ் மொழிச் சட்டமுமே குறிப்பிடப்பட்டுள்ளன.

தமிழ்மொழிச் சட்டம் மட்டும் அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டபடியால் அதன்கீழ் ஆக்கப்பட்ட தமிழ்மொழிப் பிரமாணங்களும் அரசியலமைப்பின் ஒரு பகுதியாகவும் ஆகிவிடலாம். இப்படி ஆகிவிட்டால் தமிழ் மொழிக்குக் கட்டாயமாக அரைகுறை உரிமைதானும் கிடைத்துவிடுமே என்று ஆட்சியாளரிடம் சந்தேகத்துடன் கூடிய ஒரு பெருங் கவலை தோன்றியது. இந்தச் சந்தேகத்தையும், கவலையையும் நீக்கவும், தமிழ் மக்களை ஏமாற்றி அடிமை விலங்கை இறுக்கவும் அரசியலமைப்பின் மூன்றும் அத்தியாயத்தில் *8*ஆம் பிரிவுக்குப் பின்வரும் திருத்தம் சேர்க்கப்பட்டது;

''*1958* ஆம் ஆண்டின் *28* ஆம் இலக்கத் தமிழ் மொழி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டு அரசியலமைப்புத் தொடங்குவதற்கு நேர் முன்னர் வலுவுள்ளதாயிருந்துவந்த, தமிழ்மொழி உபயோகத்துக்கான எதுவேனும் ஒழுங்குவிதி அரசியலமைப்பின் ஏற்பாடொன்ருக எவ்வகையாகவேனும் பொருள்கொள்ளப்படலாகாது; ஆனுல் *12*ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் இப்போதுள்ள எழுத்திலான சட்டமாகத் தொடர்ந்திருந்துவரும் துணை நிலைச் சட்டவாக்கமாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்மொழிப் பிரமாணங்கள் அரசியலமைப்பின் ஒரு பகுதியன்று; ஒரு சாதாரண சட்டம்தான் என்று அரசியலமைப்பிலேயே பொறிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் நல்லடிமைகள் சிலர் இந்த உள்நோக்கத்தை அறியாமலோ அறிந்தும் நல்லடிமைத் திறத்தாலோ, பைத்தியம் முற்றியதாலோ இந்தப் பிரமாணங்களைப்பற்றி அரசியலமைப்பில் குறிப்பிட்டதும் அரசாங்கம் தமிழருக்குச் செய்த அரும் பெரும் செயல் என்று பிரசாரஞ் செய்கின்றனர். இவர்கள் தாயின் கழுத்தில் இடப்படும் தூக்குக் கயிற்றைப் பூமாலையெனப் போற்றிப் புகழும் பித்தர்களைப் போன்றவர்களே.

**அமைச்சர் இருவரின் அறுதிஉரை**

இந்தத் தமிழ்மொழிப் பிரமாணங்கள் தமிழ்மொழிச் சட்டத்தின் அதிகார எல்லையை மீறியவை என்றும், இவை செல்லுபடியாகாதவை என்பதே அரசாங்கத்தின் கருத்து என்றும், இவை இப்பொழுது செயற்பட வில்லை என்றும் இவற்றை அரசாங்கம் நடைமுறைப்படுத்தாது என்றும் அரசியலமைப்பு அலுவல்கள் அமைச்சர் திரு. கொல்வின் ஆர். டி. சில்வா அரசியலமைப்புச் சபையிலும் தெளிவாகவும் விளக்கமாகவும் உறுதியாகவும் கூறிவிட்டார்.[1]

இந்தப் ''பிரமாணங்களை எவ்வகையிலும் நடைமுறைப்படுத்தமாட்டோம்'' என்று பாராளுமன்றத்திலும், அரசியலமைப்புச் சபையிலும் அமைச்சர் இருவர் வற்புறுத்திக் கூறியபின் இந்தத் தமிழ்மொழிப் பிரமாணங்களாலும், பிரமாணங்களின்றிச் செல்லுபடியாகாத தமிழ்மொழிச் சட்டத்தாலும் தமிழ் மொழி உரிமை கிடைக்குமென்று கூறி ஏமாற்ற முயல்கிறவர்கள் பட்டப்பகலை இரவு என்று துணிந்து கூறும் படுபாதகர்களேயாவர்.

தமிழ்மொழிப் பிரமாணங்களை இந்த அரசாங்கம் நடைமுறைப்படுத்தாது என்பது சான்றுகளுடன் விளக்கப்பட்டது. எனவே, பிரமாணங்கள் இன்றி இயங்க முடியாத தமிழ்மொழிச் சட்டம் உயிர் போன பிணம்தான் என்பதைப் பைத்தியம் பிடிக்காத எவரும் ஏற்றுக்கொள்வர்.

---

1. அரசியலமைப்புச்சபை அறிக்கை --ா நிரல் 333-337

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தச் சட்டத்துக்கு உயிர் ஊட்டும் மருந்தான பிரமாணங்களை நடைமுறைப்படுத்த மாட்டோம் என்று மீண்டும் மீண்டும் அரசாங்கம் வற்புறுத்திக்கூறி, இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தச் செய்யலாம் என்று தமிழ் மக்கள் சிலர் கொண்டிருந்த அரைகுறை நம்பிக்கையையும் நாசமாக்கிவிட்டது.

**பிணம் விற்கும் தரகர்கள்.**

தமிழ்மொழிச் சட்டம் என்ற குழந்தை 1958 இல் பிறந்தபொழுதே, ''அது முடமானது; நோய்வாய்ப்பட்டது; உயிர் அடங்கிக் கிடக்கின்றது. இது வேண்டாம்'' என்று தமிழ் மக்களும் தமிழ் அரசுக் கட்சியினரும் பெரும் எதிர்ப்புத் தெரிவித்தனர். ''சிறிது பொறுங்கள், இந்தக் குழந்தையை ஓடி விளையாடச் செய்கிறோம்; பிரமாணங்களாகிய மருந்தைக் கொடுப்போம்'' என்று கூறினார்கள். இப்பொழுது ''அந்த மருந்தைக் கொடுக்க மாட்டோம்'' என்று அழுத்தம் திருத்தமாகக் கூறிவிட்டார்கள். எனவே தமிழ் மொழிச் சட்டத்தின் உயிர் போய்விட்டது. இந்தப் பிணத்தை அரசியலமைப்பு என்கிற கண்ணாடிப் பேழையில் காட்சிக்கு வைத்திருக்கிறார்கள். அரசாங்கத்தின் அடிமைகளான தமிழ் மக்களிற் சிலரைத் தவிர ஏனைய தமிழ் மக்கள் எல்லோரும் பிணத்தை நாங்கள் ஏற்கமாட்டோம் என்கிறார்கள். அடிமைத் தமிழர்கள் (இவர்களின் பெயர்களைத் தமிழ் மக்கள் அறிவார்கள்) இந்தப் பிணத்தை விற்பதற்குத் தரகு வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

**புதிய பொன்வட்டிலும் உடைந்த மண் வட்டிலும்.**

அரசியலமைப்பில் குறிக்கப்பட்டுள்ள சிங்களம் மட்டும் சட்டம், தமிழ்மொழிச் சட்டம், தமிழ் மொழிப் பிரமாணங்கள் என்பவற்றின் தகைமையை வேறொரு வகையாகவும் விளக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலங்கரிக்கப்பட்ட மேசையில் ஒரு பெரிய அழகான பொன் வட்டிலும் ஒரு உடைந்த பழைய மண் வட்டிலும் இருக்கின்றன. பொன்வட்டிலில் அறுசுவை உணவு உண்ண உண்ணக் குறையாமல் நிறைந்துள்ளது. மண்வட்டிலில் உணவேயில்லை. வெறும் வட்டிலாக இருக்கிறது. அதற்கு அருகில் உடைத்து எடுக்கமுடியாத பேழைக்குள் வெறும் பழஞ்சோறு மட்டும் இட்டுவைக்கப்பட்டுள்ளது. அதனை எவரும் எடுத்து மண்வட்டிலில் இட்டு உண்ண முடியாது, உணவு நிறைந்த பொன் வட்டில்தான் சிங்களம் மட்டும் சட்டம். உணவு இல்லாத மண்வட்டில்தான் தமிழ் மொழிச் சட்டம். எவரும் எடுத்து மண் வட்டிலில் இட்டு உண்ண முடியாத பழஞ்சோறுதான் தமிழ்மொழிப் பிரமாணங்கள். இந்த அரசியலமைப்பு, உணவு நிறைந்த பொன்வட்டிலைச் சிங்கள மக்களுக்குக் கொடுக்கிறது: வெறும் மண்வட்டிலையும் உண்ண முடியாத பழஞ்சோற்றுப் பேழையையும் தமிழ் மக்களுக்குக் கொடுக்கிறது. இந்த வெறும் மண் வட்டில் பசியைத் தீர்க்குமா? வெறும் வட்டில் பசியைத் தீர்க்கும் என்று கருதுகிறவர்களை அங்கொடைக்குத் தானே அனுப்ப வேண்டும்? இப்படிக் கத்துகிறவர்களின் பைத்தியம் விரைவில் தீர்ந்துவிடுமென நம்புகிறோம்.

## மொழிபெயர்ப்பு ஒரு மோசடி

இலங்கை குடியரசாகிய 22–5–72 வரை சட்டங்கள் யாவும் ஆங்கிலத்திலேயே ஆக்கப்பட்டன. இப்பொழுது சிங்களத்தில் மட்டுமே ஆக்கப்படல் வேண்டுமென அரசியல் அமைப்புக் கட்டளை இடுகின்றது. தமிழில் மொழிபெயர்ப்பு மட்டுமே கொடுக்கப்படும். இதனால் சிங்களந் தெரியாத எவரும் சட்டங்களைப் பயன் படுத்த முடியாது. சட்ட.மொழிபெயர்ப்பைக் கொடுத்துத் தமிழரின் அடிமை நிலையை உறுதிப்படுத்துகிறது அரசியலமைப்பின் ஒன்பதாம் பிரிவு. இந்த மொழிபெயர்ப்பை ஏற்கும் எந்தத் தமிழனும் தன்னைத் தானே அடிமையாக்குபவனுவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழி பெயர்ப்பின் பெறுமதியை அரசியலமைப்பு அலுவல்கள் அமைச்சர் திரு. கொல்வின் ஆர். டி. சில்வா அரசியல் அமைப்புச் சபையில் கிளப்பிய ஆட்சேபனையே நன்கு காட்டத்தக்கது. மட்டக்களப்பு முதலாவது பா. உ. திரு. இராசதுரை **28–6–71**இல் அரசியலமைப்புச் சபையில் பேசும்பொழுது திரு. சில்வா ஆங்கிலத்தில் எழுதிய கட்டுரை ஒன்றின் தமிழ் மொழிபெயர்ப்பை வாசித்துக் காட்டினார். அப்பொழுது சபையை அதிரச் செய்யும் சிங்கக் குரலில் திரு. சில்வா ''எனது கட்டுரையை நான் எழுதிய மொழியில் குறிப்பிடவேண்டும். வேறொருவருடைய மொழி பெயர்ப்பை வாசிக்கப்படாது. மொழிபெயர்ப்பில் ஒரு சொல்லைத்தானும் நான் ஏற்க மாட்டேன்... இத்தகைய மோசடியை நான் விரும்பவில்லை... இது என்ன முட்டாள்தனம்"[1] என்று ஆட்சேபித்தார்.

மொழிபெயர்ப்பைப் பயன்படுத்துவது ''ஏமாற்று வித்தை–முட்டாள் தனம்'' என்று கூறிய இந்த அமைச்சர் கொல்வின் ஆர். டி. சில்வா அவர்களே அரசியலமைப்பில் தமிழ் மக்களுக்குச் சட்ட மொழிபெயர்ப்பைக் கொடுத்திருப்பது விநோதமான செயலன்றோ!

**நீதி மன்றப் பதிவேட்டுமொழி சிங்களம் மட்டுமே!**

**1960**இல் நிறைவேற்றப்பட்ட நீதிமன்ற மொழிச் சட்டம் ஒரு சாதாரண சட்டம். அதனால், எல்லா வசதிகளும் இருந்தால் நீதிமன்றங்களைச் சிங்களத்தில் நடைபெறச் செய்தற்கு நீதி அமைச்சருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது. ஆனால் அரசியல் அமைப்போ இப்பொழுது இலங்கையின் எல்லா வகையான நீதிமன்றங்களிலும் பேச்சு மொழியும், பதிவேட்டு மொழியும் சிங்களமே என்பதை உறுதிப்படுத்துகிறது. தமிழ்ப்பகுதிகளிலேயாகிலும் தமிழ் பதிவேட்டு மொழியாகவிருக்குமென்று அரசியலமைப்புக் கூறவில்லை. இதனையாகுதல் செய்விப்போமென நாங்கள்

1. ''This kind of triekery I do not like. What kind of nonsense is this": **அரசியல் அமைப்புச் சபை அறிக்கை 1/31 நிரல் 2472-75**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைச்சர்களுடன் நடத்திய பேச்சுக்களும் பயன்தரவில்லை. இந்த 11 (1) ஆம் பிரிவில் தமிழ் என்ற சொல்லைக் கூடப் பயன்படுத்த ஆட்சியாளர் விரும்பவில்லை. ''தேசிய அரசுப் பேரவை தனது சட்டத்தினுல் அல்லது சட்டத்தின் கீழ் வேறுவகையாக ஏற்பாடு செய்யலாம்.'' என்று அரசியலமைப்புக் கூறுகிறது. ''வேறுவகையாக'' என்ற சொல்லின் இடத்தில் ''தமிழில்'' என்று குறிப்பிடுமாறு நாங்கள் கேட்டும் செய்யாத இந்த அரசாங்கம் உள்ளத் தூய்மையுடன் தமிழுரிமைகளைக் கொடுக்கப் போகின்றதா? ''தமிழில்'' என்று கூறி அரசியலமைப்பில் தமிழுக்கு ஓரிடத்தைக் கொடுக்கப்பட்ாது என் ப தே அரசாங்கத்தின் நோக்கமாகும். தமிழ் மொழிக்கு அரசியலமைப்பில் எவ்வித இடமும் கொடுப்பதில்லை என்பதே அரசாங்கத்தின் அழுத்தமான நச்சுக் கொள்கையாகும். இதைப்போலவே இந்த அரசியலமைப்பில் புத்தசமயத்தை அரசாங்க மதமாக்கி அதற்குத் தனியிடம் கொடுத்த அரசாங்கம் ஏனைய சமயங்களின் பெயர்களைக் கூடக் குறிப்பிட விரும்பவில்லை.

**நயவஞ்சகக் கொள்கை.**

புதிய அரசியலமைப்பில் புத்த சமயத்தை மட்டுமே தனித்துயர்த்திப் போற்றுவது என்பதும், வேறு எந்த மதத்தையும் குறிப்பிடுவதில்லை என்பதும், சிங்களத்துக்கு மட்டுமே தனியிடங் கொடுப்பது என்பதும், தமிழ் மொழிக்கு உரிய இடங்கொடுப்பதில்லை என்பதுமே இந்த அரசாங்கத்தின் வடிகட்டின வகுப்புவாத சர்வாதிகார நயவஞ்சகக் கொள்கை என்பதை யாவரும் எளிதில் அறியலாம்.

இந்த அரசியலமைப்பால் சிங்களமொழி பெறும் உயர்நிலையையும் தமிழ்மொழி பெறும் இழிநிலையையும் வரிசைப்படுத்திக் காட்டுகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. சாதாரண சட்டமான சிங்களம் மட்டும் சட்டம் அரசியலமைப்பில் ஒரு பகுதியாக இலகுவில் மாற்ற முடியாமல் பாதுகாக்கப்பட்டுள்ளது.

2. சிலரை ஏமாற்றுவதற்காகப் பிரமாணங்களின்றி இயங்காத தமிழ்மொழிச் சட்டம் உயிர்போன பிணமாக்கப்பட்டு அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டுள்ளது.

3. ''நடைமுறைப் படுத்தமாட்டோம்'' என்று அரசாங்கம் பலமுறை வற்புறுத்திக் கூறிய தமிழ்மொழிப் பிரமாணங்கள் அரசியல் அமைப்பின் ஒரு பகுதியாகாது; ஒரு சாதாரண துணைச் சட்டம்தான் என்று கூறிச் சிங்களத் தீவிரவாதிகளின் சந்தேகத்தை நீக்குதற்கு இப்பிரமாணங்கள் திருத்தமாக அரசியலமைப்பில் நுழைக்கப்பட்டுள்ளன.

4. சிங்களமே இந்நாட்டு நீதி மன்றங்களின் பேச்சு மொழியும் பதிவேட்டு மொழியும் என்று அரசியலமைப்பில் உறுதிசெய்யப்பட்டுள்ளது.

5. தமிழ்ப் பகுதிகளில்தானும் தமிழ் பதிவேட்டுமொழியாயிருக்கும் என்பதைக்கூட அரசியலமைப்புக் கூறவில்லை.

6. சிங்களத்திலேயே சட்டங்கள் ஆக்கப்படும் என்று தனிப் புது உரிமை சிங்கள மொழிக்கு அரசியல் அமைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

7. தமிழ் மொழியில் சட்டமொழிபெயர்ப்பே கொடுக்கப்படுமென்று அரசியலமைப்பில் கூறித் தமிழ் மக்கள் மீது அடிமை முத்திரை பொறிக்கப்பட்டுள்ளது.

வசதியாய் இருந்தால் விரும்பினுல் அரைகுறைத் தமிழ் மொழிபெயர்ப்பைக் கொடுத்துச் சமாளித்துவிட்டுத் தமிழரைச் சிங்களம் படிக்கச் செய்து, பின் தனிச் சிங்களத்தில் தமிழரை ஆட்சி செய்யலாம் என்று ஆளும் கட்சியினர் தொடர்ந்து கூறிவரும் கொள்கைக்கு ஏற்பவே இந்த அரசியலமைப்பு ஆக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழுதுள்ள அரைகுறைத் தமிழ் உரிமைகளும், அரசாங்கம் தரக்கூடும் என்று கருதிய உரிமைகளும், தரு மாறு கேட்ட உரிமைகளும் இனிக் கிடைக்கவே கிடைக் காது என்பதை இந்த அரசியல் அமைப்பு உறுதிப்படுத்தி விட்டது.

சிறுபான்மையினரின் மொழி உரிமை, சமய உரிமை முத லியவற்றுக்கு விசேட பாதுகாப்புக் கொடுப்பதே ஓர் அர சியலமைப்பின் முதன்மையான முழு நோக்கமாகும். இந்த நோக்கத்துக்கு முழுமாருக இந்தச் சிங்கள அரசியலமைப் புப் பெரும் பான்மையினரின் சிங்கள மொழிக்கும் பௌத்த மதத்துக்கும் மட்டுமே பாதுகாப்புக் கொடுக்கின்றது; தமிழ் மொழியையும் சிறுபான்மையினரின் மதங்களையும் திட்டமிட்டுப் புறக்கணிக்கின்றது.

## அடிமைச் சாசனம்

சில சலுகைகளைக் கொடுத்துத் தமிழர் சிலரைக் கைப் பொம்மைகளாக்கி அவர்களின் பாராட்டுக்களுடன் தமிழ் மொழி உரிமைகளைப் பறித்துத், தமிழ் மக்களின் எதிர்ப் பைச் சிதைத்து, அவர்களை அடிமைகளாக்கிச் சிங்க ளத்தைத் தமிழ்ப் பகுதிகளிலே ஆட்சிமொழியாக்கிப் படிப் படியாகத் தமிழர்களைச் சிங்களவர் ஆக்குதற்கு ஆளுங்கட் சியினர் சமதர்மம் என்ற போர்வையில் வகுத்துள்ள சூழ்ச் சித் திட்டமே இந்த அரசியலமைப்பு. இதனுலேயே இந்த அரசியலமைப்பைத் தமிழினக் கொலைக்கு வழிவகுக்கும் தமிழரின் அடிமைச் சாசனம் என்கிறேம்.

இந்த அரசியலமைப்புத் தமிழரின் அடிமைச் சாசனம் மட்டுமன்று குடியரசு எனும் திரைமறைவில் பௌத்த சிங்கள ஏகாதிபத்தியத்தை நிலை நாட்டும் திட்டமுமாகும். நெல்லுக்கும்—புல்லுக்கும், இரவுக்கும்—பகலுக்கும் மலைக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடுவுக்குமுள்ள வேறுபாட்டைக் காணத்தக்க அறிவுள்ள மக்கள் யாவரும் இவ்வுண்மைகளை இலகுவில் அறியலாம்.

**சிங்களவரின் அடிமைகள்**

இந்த உண்மைகளை நன்கு தெரிந்தும் சிலர் "நீதி மன்றங்களில் தமிழர் தமிழில் பேசும் உரிமையுடன், அவர்கள் சமர்ப்பிக்கும் விண்ணப்பங்கள் முதலியவற்றைத் தமிழில் சமர்ப்பிக்கும் உரிமையும் கொடுக்கப்பட்டுள்ளது. இது ஒரு வரப்பிரசாதம்" என்று வாய் கூசாமல் பேசுகின்றனர். கூலிக்கு மாரடிக்கும் இவர்கள் தமிழர்கள் தங்கள் வீடுகளில் தமிழில் பேசும் உரிமையும், அரசாங்கத்துக்கு விண்ணப்பங்கள், கடிதங்கள் முதலியவற்றைத் தமிழில் அனுப்பும் உரிமையும் கொடுக்கப்பட்டுள்ளன என்பதையும் கூறி இந்தக் கிடையாத கிடைப்பைத் தந்த அரசாங்கத்தைப் புகழலாமே! தமிழன் தமிழில் பேசுதற்கும் தமிழில் எழுதுதற்கும்கூட அரசாங்கம் அனுமதி கொடுக்க வேண்டுமா?

அடிமைப் புத்தியால் அரசாங்கத்தை மகிழ்விக்க எண்ணும் சிலர் "நீதிமன்றங்களில் தமிழில் பேசலாம்" என்று பிதற்றுதலைப் போலவே "அரசியலமைப்பில் தமிழ் தனக்குரிய" இடத்தைப் பெற்றுள்ளது "எனவும், "இப்பொழுது சட்டங்களைத் தமிழில் படிக்கும் வசதி கொடுக்கப்பட்டுள்ளதெனவும்" சலுகைகளுக்காக அரசாங்கத்தைக் கட்டி அணைத்துக்கொண்டிருக்கும் இனத் துரோகிகள் சிலர் பிதற்றுகிறார்கள். போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆண்ட காலத்தில் அவர்களுக்கு நல்ல அடிமைகளாக இருந்து சலுகைகளைப் பெற்றவர்களைப்போல் இவர்களும் ஆளும் சிங்களவர்களின் நல்ல அடிமைகளாகி விட்டார்கள். இவர்களின் அடிமைத்தன மோகம் இவர்களுடைய பகுத்தறிவையும் மனச்சாட்சியையும் கொன்றுவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தமிழர் உடன்படவில்லை - எல்லோரும் எதிர்க்கிறார்கள்!**

அரசியலமைப்புக்கள் நாட்டு மக்கள் எல்லோருடைய இணக்கத்தையும் பெற்று எல்லோரும் ஏற்றுக்கொள்ளத் தக்கனவாகவே இந்தியா போன்ற ஏனைய நாடுகளில் ஆக்கப்பட்டன. ஆனால் இலங்கையிலோ் ஆளும் சிங்களக் கட்சிகள் வகுப்புவாதப் பெரும்பான்மையைக் கொண்டு ஏனைய சிறுபான்மையினரைச் சிறிதும் மதியாமலும், அவர்களின் உடன்பாட்டைப் பெற எதுவுஞ் செய்யாமலும் இந்த அரசியலமைப்பை ஆக்கிச் சிறுபான்மையினர் மேல் திணித்துள்ளனர்; அவர்களை அடிமைகளாக்கியுள்ளனர்.

இந்த நாட்டின் இரண்டாவது பெரிய இனமான தமிழ் இனம் — இந்த நாட்டை ஆண்ட தமிழினம்—சிங்கள அரசைப்போலத் தமிழ் அரசை நடத்திய தமிழ் இனம் — சிங்களவருக்கு முன் இந்த நாட்டில் வாழ்ந்த தமிழ் இனம் —உலகத்தில் வழங்கும் மொழிகளில் மிகுந்த பழைமையை உடைய தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட தமிழினம் — இந்த நாட்டை ஆளும் உரிமை கொண்ட தமிழினம் முற்றமுழுதாக இந்த அரசியலமைப்பை நிராகரித்து விட்டது. இதனாலேயே 24–5–72 இல் இந்த அரசியல் அமைப்பைத் தமிழ் மக்கள் பகிரங்கமாகத் தீக்கிரையாக்கினார்கள்.

தமிழ் மக்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பேர் இந்த அரசியலமைப்பை எதிர்க்கின்றனர். தெரிவு செய்யப்பட்ட தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர் பத்தொன்பது பேரில் பதினைந்து பேர் எதிர்க்கிறார்கள்; அதாவது நூற்றுக்கு எழுபத்தொன்பது வீதமானவர்கள் எதிர்க்கிறார்கள்.

**நால்வருக்குச் "சவால்!" "சவால்!"**

சிங்கள அரசாங்கத்தோடு சேர்ந்து "தமிழர்" எனப்படும் நான்கு பாராளுமன்ற உறுப்பினர் இதனை ஆதரிக்கிறார்கள். இந்த நான்கு பேரில் மூன்றுபேர் தமிழர் கூட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணியில் உள்ள தமிழரசுக் கட்சியின் செல்வாக்காலும் தமிழ்க் காங்கிரசின் செல்வாக்காலும் பாராளுமன்றப்படி ஏறினவர்கள். தாமாகத் தனித்து நின்று போட்டியிட்டால் வெல்ல முடியாதவர்கள்; இப்பொழுது பதவியைத் துறந்து போட்டியிட்டால் நூறுவாக்குக்களைக்கூடப் பெற முடியாதவர்கள். இதை இவர்கள் ஆட்சேபிக்கத் துணிந்தால் தமிழர் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர் எவருடனாவது போட்டியிட வருமாறு இவர்களை அழைக்கிறோம்.

நாலாவது பாராளுமன்ற உறுப்பினர் தப்பித் தவறி முசிலிம் பிரதிநிதியின் இடத்தைப் பிடித்தவர். அவரை மீண்டும் போட்டியிட வருமாறு மட்டக்களப்புப் பாராளுமன்ற உறுப்பினர் சவால் விடுத்துள்ளார். இவர் ஏற்றால் என்ன நடக்கும்? தமிழரின் வாக்குக்கள் ஒன்றேனும் இவருக்குக் கிடைக்குமா? இந்த நான்கு பாராளுமன்ற உறுப்பினர்களும் முதன் முதலாகப் பாராளுமன்றஞ் சென்றவர்கள்; தங்களுக்கு இதுவே முதன் முறையும் கடைசி முறையும் என்பதை நன்கு தெரிந்தவர்கள்.

எனவே இந்த நான்கு பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு தமிழினத்தின் முழு எதிர்ப்பையும் எவ்வகையிலும் பாதிக்காது. அரசியல் நாகரிகம் உள்ள எவரும் இந்த அரசியல் அமைப்பைத் தமிழினம் முழுதும் எதிர்க்கின்றதென்றே கொள்வர்.

### 1970 தேர்தல் காட்டும் இனப்பிரிவினை

மேலும், இந்த நான்கு பாராளுமன்ற உறுப்பினரும் அரசியல் அமைப்புச் சபை நிறுவப்பட்டபொழுது எதிர்க் கட்சியிலே இருந்தவர்கள். பின்னர்தான் ஆளுங்கட்சியைச் சேர்ந்தார்கள். 1970 ஆம் ஆண்டில் பாராளுமன்றத் தேர்தலில் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த கட்சிகளின் சார்பில் போட்டியிட்ட தமிழர் ஒருவருமே வெற்றிபெறவில்லை. தெரிவு செய்யப்பட்ட தமிழ்ப் பிரதிநிதிகள் பத்தொன்பதுபேரும் எதிர்க்கட்சியிலேயே இருந்தனர். ஆளும் கட்சியில் தமிழர் ஒருவரும் இருக்கவில்லை. ஐக்கிய முன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னணிக் கட்சி தனிச் சிங்களக் கட்சியாகவும் எதிர்க்கட்சி தமிழர் எல்லோரையும் கொண்ட கட்சியாகவும் காட்சி அளித்தன. இதனாலேயே பிரதம அமைச்சர் திருமதி பண்டாரநாயக்கா தமிழர் ஒருவரைத் தேடிப்பிடித்துத் ''திடீர் அமைச்ச'' ராக்கினார். மக்களிடம் அரசியல மைப்பை ஆக்குதற்கு அதிகாரம் பெற நடைபெற்ற தேர் தலின் முடிபு, வரலாற்று ஆசிரியர்களின் முழுக் கவனத் தையும் இழுக்கத்தக்கது. சிங்களவரை மட்டுமே ஆளுங் கட்சியினராகவும் தமிழர் எல்லோரையும் எதிர்க்கட்சியின ராகவும் இன அடிப்படையில் இத்தேர்தல் பிரித்தது. ''சம தர்மம்'' வாய்ச் சொல்லாக மட்டும் இருந்தது. வகுப்பு வாதமே சிங்கள இன—தமிழ் இனப் பிரிவினையே – நிலை நாட்டப்பட்டது. இந்த நாட்டின் எதிர்கால வாழ்வு சிறக்கவேண்டுமென எண்ணுபவர்கள் இந்த உண்மையை மறைக்கப்படாது; மதிக்கவேண்டும். கொடிய சிங்களம் மட் டும் சட்டத்தின் விளைவு இது என்பதை மறந்து மேலும் அச் சட்டத்தை உறுதிப்படுத்த அரசியலமைப்பை ஆக்கி னால் சிங்கள இனமும் தமிழ் இனமும் ஒன்றுபடுமா? தமிழர்களுக்கு உரிமை கிடைக்குமா?

**ஆதரித்தவர்களும் எதிர்த்தவர்களும் சம வீதத்தினர்**

மேலும் இந்த அரசியலமைப்பைத் தெரிவு செய்யப் பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களில் நூற்றுக்கு எழுபத்து ஒன்பது வீதமானவர்களே ஆதரித்தனர். எனவே ஆதரித் தவர்களின் வீதமும் தமிழர்களுக்குள்ளே எதிர்த்தவர்களின் வீதமும் சமமானவை என்பதையும் யாவரும் அறிந்து கொள்ளவேண்டும்.

இந்த அரசியல் அமைப்புத் தமிழரை அடிமைப் படுத் தும் சாசனமாக உருவாக்கப்படுவதை உணர்ந்தவுடன் தமிழரசுக்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் அரசியலமைப் புச் சபையிலிருந்து வெளியேறினர். இந்த அரசியல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைப்பை ஆக்குதற்குத் தமிழரிலே பெரும்பகுதியினர் பங்கு பற்றவில்லை. சிங்கள ஆட்சியாளரால் தமிழ் மக்களின் பெரும்பான்மையினரான பிரதிநிதிகளின்றி ஆக்கப்பட்ட அரசியலமைப்பைத் தமிழ் மக்கள் ஏற்கவேண்டிய கடப்பாடும் — கட்டுப்பாடும் நிபந்தனையும்—நியாயமும் இல்லை.

## தமிழர் கூட்டணித் தீர்மானம்

தமிழ் மக்களின் ஒத்துழைப்பைப் பெறமுடியாமலும் அவர்களுடைய எதிர்ப்பைச் சிறிதும் பொருட்படுத்தாமலும் வேண்டுமென்றே அவர்களை ஒதுக்கி விட்டுச் சிங்கள ஆட்சியாளரால் தமிழரை அடிமைப் படுத்தும் சாசனமாகவும் பௌத்த சிங்கள ஏகாதிபத்திய அமைப்புத் திட்டமாகவும் ஆக்கப்பட்ட இந்த அரசியலமைப்பைத் தமிழ் மக்களின் அரசியலமைப்பாக ஏற்றுக் கொள்வதில்லை என்று **14—5—72**இல் திருக்கோணமலையில் கூடிய தமிழர் கூட்டணி நிறைவேற்றிய தீர்மானமும் இதனுடன் சேர்க்கப்பட்டுள்ளது. இந்தத் தீர்மானம் இந்த அரசியலமைப்பில் உள்ள ஏனைய குறைபாடுகளையுந் தமிழ் மக்களைச் சந்தேகப் பிரசைகளாக்கிக் குடியுரிமை பெற்றவர்களின் குடியுரிமையைப் பறிக்கச் செய்துள்ள சூழ்ச்சியையும் நன்கு புலப்படுத்துகிறது.

## நம்மை நாமே ஆள்வோம்!

எனவே, தம்மைத்தாமே அடிமைகளாக்கி அழிக்க விரும்பாத மானமுள்ள தமிழர் எல்லோரும் இந்த அடிமைச் சாசனத்தை மாற்றி அமைக்கக் கடைசி மூச்சு வரையும் போராடவேண்டும். இப்பொழுது தொடங்கிய இந்தப் போராட்டம் வெற்றி காணும்வரை தொடர்ந்து நடைபெற வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் போராட்டம் அகிம்சைப் போராட்டம்! நய வஞ்சகச் சிங்கள ஏகாதிபத்தியச் சூழ்ச்சிக்கு எதிரான போராட்டம்! நீதியை, நியாயத்தை, உண்மையை, உயர்ந்த மானத்தை நிலைநாட்டும் போராட்டம்! ஆகை யால் இப்போராட்டம் எக்காலத்திலும் எவ்வகையிலும் தோல்வி காணாது,! உலகத்தில் உண்மை, நீதி, நியாயம் என்றும் வெல்வதைப்போல நாமும் வெல்வோம்! நம்மை நாமே ஆள்வோம்!

**ஆளும் சிங்கள அரசுக்கு :**

கூழும் குடியும் ஒருங்கு இழக்கும் கோல் கோடிச்
சூழாது செய்யும் அரசு. **(தமிழ் மறை 554)**

**அடிமைகளாக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு :**

அரியவென்று ஆகாதவில்லை பொச்சாவாக்
கருவியாற் போற்றிச் செயின். **(தமிழ்மறை 537)**

**வீரகேசரி 22–5–72**

''தமிழ் மக்களின் உயிரினும் மேலான அவர்களது தெய்வத் தமிழ் மொழிக்குப் புதிய அரசியல் திட்டம் உரிய மதிப்பும் மரியாதையும் அளிக்கவில்லை. பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னால் ஆரம்பமான தமிழ் மக்களின் மொழியுரிமைப் பறிமுதல் படலம் புதிய அரசியல் திட்டத்தில் பூரணத்துவம் பெற்றுவிட்டது.''

**கல்கி 4–6–72**

''தமிழருக்குப் புதிய அரசியல் அமைப்பு திருப்தியும் நியாயமும் அளிப்பதாகச் சொல்வதற்கில்லை. வடக்கு கிழக்கு மாகாணங்களில் சிங்களத்துக்குச் சமமான அந்தஸ்தைத் தமிழுக்கு வழங்கவேண்டுமென் பதே தமிழரின் நியாயமான விருப்பம். அதைப் புறக்கணித்திருப்பது துர்ப்பாக்கியவசமானது.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழர் கூட்டணி நிறைவேற்றிய புதிய அரசியல் அமைப்பை நிராகரிக்கும் தீர்மானம்.

''தமிழரசுக் கட்சி, தமிழ்க் காங்கிரசுக் கட்சி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரசு ஆகியவற்றின் பிரதிநிதிகள் கட்சிசார் பற்ற கல்விமான்கள், பேராசிரியர்கள், மாணவர் மன்றப் பிரதிநிதிகள், மொழிவழித் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் பெற்ருர் சங்கங்களின் பிரதிநிதிகள் உட்பட வடக்கு, கிழக்கு, மலையகம், கொழும்பு, நீர்கொழும்பு ஆகிய பல்வேறு பகுதிகளிலிருந்தும் வந்த நூற்றுக்கணக்காஞேர் திருகோணமலை நகரமண்டபத்தில் 14-5-72இல் கூடி நிறைவேற்றியது.''

''அரசியலமைப்பை ஆக்குவதில் நாட்டு மக்கள் சுதந்திரமாகவும் பூரணமாகவும் பங்குபற்ற வழியின்றி மக்களின் பேச்சுச் சுதந்திரம் எழுத்துச் சுதந்திரம் முதலியவை அவசரகால சட்டத்திஞலும் கடுமையான தணிக்கையிஞலும் பறிக்கப்பட்டிருக்கும் சூழ்நிலையில் புதிய குடியரசு அரசியலமைப்பை நிறைவேற்ற அரசாங்கம் முயல்வதாலும், விசேடமாகத் தமிழ் மக்களுடைய ஒன்றுபட்ட கருத்தைப் புறக்கணித்து நிரந்தரமான வகுப்புவாதப் பெரும்பான்மைப்பலத்தைக் கொண்டு தமிழ் மக்கள்மீது ஒரு அரசியல் திட்டத்தைத்திணிக்க முயல்வதாலும், வரலாற்றுச் சிறப்பும் பெருமையும் பெற்ற திருகோணமலையில் 1972ஆம் ஆண்டு மே மாதம் 14ஆம் திகதியன்று இலங்கையின் எல்லாப் பாகங்களிலும் வாழும் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் கூடிய மாநாடு குறிப்பாகக் கீழ்க்காணும் காரணங்களுக்காக இவ்வரசியல் திட்டத்தை நிராகரிப்பதென்றும் அதை எக்காலத்திலும் தமிழரின் அரசியலமைப்பாக ஏற்றுக்கொள்வதில்லை என்றும் தீர்மானிக்கிறது.''

1. தனி மனிதர்களினதும் இன கலாசாரக் குழுக்களினதும் சமத்துவத்துக்கு உத்தரவாதமளிக்கக்கூடிய முழுமையான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படை உரிமைகளை வழங்க இவ்வரசியல் திட்டம் தவறிவிட்டது.

2. இந்நாட்டில் வாழும் தமிழ் பேசும் மக்கள் அனைவரும் சந்தேகப் பிரசைகளாக ஆக்கப்பட்டிருக்கும் நிலையை என்றென்றைக்கும் உறுதிப்படுத்துவதுடன் சட்டப்படி குடியுரிமை பெற்றவர்களுடைய குடி உரிமையையும் பாரபட்சமாகப் பறிக்க வழிவகுக்கும் வகையில் பிரசைகளுக்கிடையில் வகுப்புப் பிரிவினைகளை இவ்வரசியல் திட்டம் ஏற்படுத்தியுள்ளது.

3. கல்வி, நிர்வாகம் ஆகிய துறைகளில் தமிழ் மொழிக்குச் சட்டமுறைப்படி உரிமை அளிக்கத் தவறியதன் மூலம் இவ்வரசியல் அமைப்பு தமிழ் பேசும் மக்களுடைய நியாயமான அபிலாசைகளை முற்றாக நிராகரித்து அவர்களைத் தம் சொந்த நாட்டிலேயே இரண்டாந்தரப் பிரசைகளாக்குகின்றது.

4. இன்று மதச்சார்பற்ற அரசாக இருக்கும் நிலையை மாற்றிப் பௌத்த மதத்திற்கு முதன்மை அளிப்பதன் மூலம் இவ்வரசியல் திட்டம் ஏனைய மதத்தவர்களைத் தாழ்ந்த நிலைக்குத் தள்ளுகின்றது.

---

**''ரிபியூன்'' 30-5-72.**

''புதிய அரசியல் சட்டம் சந்தேகமில்லாமல் மூன்று வகையானவருக்கே ஏற்புடையதாக இருக்கிறது. பௌத்தம் அரசாங்க மதமாக்கப்பட்டு விட்டதென்று மகிழ்ச்சிக் கடலில் மிதக்கும் பௌத்தர்களுக்கும், பருத்தித்துறை தொடக்கம் தேவந்துறை வரை சிங்களம் மட்டுமே உத்தியோக மொழியாக்கப்பட்டுவிட்டதென்று மகிழும் சிங்கள மக்களுக்கும் இடதுசாரிகளுக்குமே அது இசைந்ததாக இருக்கிறது.

இன, மத மொழி ரீதியிலான சிறுபான்மை மக்களை மிகவும் குறைந்த காலத்தில் சிங்களவர்களாக்கவும் பௌத்தர்களாக்கவும் ஒரு தனிச் சிங்கள நாட்டை உருவாக்குவதற்கு ஏற்ற நல்ல சூழ்நிலையைப் புதிய அரசியல் சட்டம் உருவாக்கிவிட்டதாகவும் அவர்கள் கருதுகிறார்கள். சிறுபான்மை இனத்தினரை விழுங்கிவிடும் திட்டத்துக்கு இடதுசாரிகள் பெரிதும் பயன்படுவார்கள் என்றும் அவர்கள் கருதுகிறார்கள்''.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதம அமைச்சருக்கு ஒரு பகிரங்க வினா

## யார் பைத்தியக்காரர்?

எண்: 18/77
வேலணை
12-5-72.

மாண்புமிகு
திருமதி சிறிமாவோ ஆர். டி. பண்டாரநாயக்கா அவர்கள்,
பிரதம அமைச்சர்,
கொழும்பு.

அன்புடையீர்!

ஒரே ஒரு பகிரங்க வினா

1958இல் ஆக்கப்பட்ட தமிழ்மொழி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் பிரமாணங்களின்றி நடைமுறைப்படுத்தமுடியாத சட்டம். இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துதற்கு 14-12-1960 இல் பிரதிநிதிகள் சபையில் சில பிரமாணங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. மாண்புமிகு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவும் பாராளுமன்ற உறுப்பினர் சிலரும் செய்த சூழ்வினையால் இப்பிரமாணங்கள் நிறைவேற்றப்படாமல் மீட்கப்பட்டன. 1966இல் முன்னைய அரசாங்கம் தமிழ்மொழிப் பிரமாணங்களைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றியது. இவற்றை எதிர்க்கட்சியிலிருந்த நீங்கள் தீவிரமாக எதிர்த்தீர்கள்.

இந்தப் பிரமாணங்களை நடைமுறைப்படுத்தமாட்டோம் என்று 1971இல் பாராளுமன்றத்தில் இரண்டுமுறை மாண்புமிகு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா கூறினர். அரசாங்கத்துக்குத் தமிழில் எழுதப்படும் கடிதங்களுக்குத் தமிழில் மறுமொழி பெறும் உரிமையை இப்பிரமாணங்கள் கொடுக்கின்றன என நான் பாராளுமன்றத்தில் வற்புறுத்தி வாதாடியபொழுது மாண்புமிகு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா இந்த விடயத்தை நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்லுமாறு கூறினர்.

உங்கள் அரசாங்கம் தமிழ்ப் பகுதிகளில் தமிழைப் புறக்கணித்துச் சிங்களத்தைத் திணிக்கிறது. தமிழ் தெரியாத உத்தியோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தர்களைத் தமிழ்ப்பகுதிக்கு அனுப்புகிறது. தமிழ்ப்பகுதிகளில் உள்ள பொலிசு நிலையங்களில் சிங்களத்தில் வாக்குமூலங்களைப் பதிந்து கையெழுத்திடுமாறு தமிழ் மக்களை நெருக்குகின்றது. 1958 தொடக்கம் இன்றுவரை தமிழ்மொழிச் சட்டத்தை நடைமுறைப்படுத்த நீங்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. நாங்கள் பலமுறை இடித்து இடித்துக் கேட்டும் நீங்கள் ஒன்றுஞ் செய்யவில்லை.

இச்சூழ்நிலையில் புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தில் தமிழ் மொழிச் சட்டத்தையும் தமிழ்மொழிப்பிரமாணங்களையும் சேர்ப்பதால் தமிழ் மக்களுக்கு மொழி உரிமை கிடைத்துவிடும் என்று கூறுகிறவர்கள் பைத்தியக்காரர்களா? நம்புகிறவர்கள் பைத்தியக்காரர்களா? உள்ளத்தைத் தொட்டு உண்மையைக் கூறுங்கள். நன்றி.

அன்பன்
கா பொ. இரத்தினம்
பா. உ.

பிரதிகள் :

1. மாண்புமிகு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா, அவர்கள்.
2. மாண்புமிகு செ. குமாரசூரியர் அவர்கள்.
3. மாண்புமிகு பதியுதின் மாமூத் அவர்கள்.
4. மாண்புமிகு கொல்வின் ஆர். டி. சில்வா அவர்கள்.

இக் கடிதமும் பிரதிகளும் பதிவு அஞ்சலில் பிரதம அமைச்சருக்கும் ஏனைய நான்கு அமைச்சர்களுக்கும் 1-5-˜2-இல் அனுப்பப்பட்டன.

**தினத்தந்தி 26-5-72.**

இலங்கை குடியரசானதைத் தொடர்ந்து புதிய அரசியல் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. இந்த அரசியல் சட்டத்தில் சிங்களவர்களுக்கு முழு அந்தஸ்தும் உரிமைகளும் வழங்கப்பட்டுள்ளன. தமிழர்களுக்கும் தமிழ் மொழிக்கும் உரிய இடம் அளிக்கப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலை, ச. ப 60 முதற் பதிப்பு: யூன் 1972.

இந் நூலில்:

- ✶ அரசியல் அமைப்பு—குடியரசுத் திரைமறைவில்—
  - பௌத்த சிங்கள ஏகாதிபத்தியப் பிறப்பு
  - தமிழ்ப் பகுதிகளில் சிங்களத் திணிப்பு
  - தமிழினக் கொலைக்குப் பணிப்பு
- ✶ அரசியல் அமைப்பில் – சமதர்மப் போர்வையில்
  - பௌத்த மதத்துக்குத் தனியிடம்
  - ஏனைய மதங்களுக்கு இல்லை இடம்
  - சிங்கள மொழிக்கு முழுப் பாதுகாப்பு
  - தமிழ் மொழிக்குப் புறக்கணிப்பு
- ✶ தமிழ்மொழிச் சட்டம் உயிர்போன பிணம்
- ✶ சட்டமொழிபெயர்ப்பு அடிமை முத்திரை
- ✶ மொழிபெயர்ப்பு ஒரு மோசடி
  — கொல்வின் ஆர். டி. சில்வா
- ✶ பிணத்துக்கு விலைபேசும் தரகர்கள்
- ✶ சாலும் மேயும்
- ✶ நீதிமன்றங்களில் தமிழில் பேசவிடுவது பெரும் உரிமையெனின்
  வீடுகளில் தமிழில் பேசவிடுவதும் பெரும் உரிமைதானே!
- ✶ தூக்குக் கயிற்றைப் பூமாலை என்று போற்றும்பித்தர்கள்!
- ✶ பொன் வட்டிலும் மண் வட்டிலும்
- ✶ தமிழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்குச் செய்த அநீதி
- ✶ தமிழர் உடன்படவில்லை' எதிர்க்கிறார்கள்
- ✶ ஆதரித்தவர்களும் எதிர்ப்பவர்களும் சமவீதத்தினர்
- ✶ ''தமிழர்'' எனப்படும் நால்வருக்குச் சவால்! சவால்!
- ✶ தமிழர் கூட்டணியின் நிராகரிப்புத் தீர்மானம்
- ✶ பிரதம அமைச்சருக்குப் பகிரங்க வினா
- ✶ யார் பைத்தியக்காரர்?........

ஆனந்தா அச்சகம், யாழ்ப்பாணம் 72-9990

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org